# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆவணி - 8 செவ்வாய் 24.08.2021 மலர் - 2, இதழ் - 140


## கிராமப்புற இளைஞர் திறன் வளர்ச்சி

நமது நாட்டின் 75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு தீனதயாள் உபாத்யாய கிராமப்புறத் திறன் வளர்ச்சி திட்ட முகாம் நாடு முழுவதும் நடத்தப்பட்டது. இதில் பதிவு செய்தவர்களில் தகுதியுள்ள 75,660 இளைஞர்கள் பயிற்சிக்கு தேர்வு செய்யப்பட்டனர். கிராமப்புற இளைஞர்களின் வேலைவாய்ப்பை பெருக்கும் நோக்கோடு செயல்படுத்தப்படும் இந்த திட்டத்தில் 16 முதல் 35 வயதிற்குள் உள்ளோருக்கு 2,381 பயிற்சி மையங்களில் 611 வகையான வேலைவாய்ப்புத் திறன் வளர்ச்சிப் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. இதுவரை 11 லட்சத்தி 18 ஆயிரத்து 567 இளைஞர்கள் இதில் பலனடைந்துள்ளனர். அதில் 7.07 லட்சம் பேர் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர் என மத்திய ஊரக வளர்ச்சித்துறை தெரிவித்துள்ளது.

விஜயபாரதம்

## மா. சுப்பிரமணியன் புதிய விளக்கம்



விஜயபாரதம்

சிவகங்கை மாவட்டம் காரைக் குடியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட தமிழக சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில், 'தமிழகத்தில் தொற்று பாதிப்பு அதிகம் இருந்த மாவட்டங்களில் மருத்துவத்துறை நடத்திய ஆய்வில், கோயில்களில் அதிகம் கூட்டம் கூடியதால்தான் தொற்று அதிகரித்திருப்பது கண்டறியப்பட்டது. அதனால் கோயில்களில் தளர்வுகள் அறிவிக்கப்படவில்லை' என்ற ஒரு விசித்திர விளக்கத்தை அளித்துள்ளார். அவரின் இந்த பேச்சு ஹிந்துக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. அப்படியெனில், சர்ச்சுகளிலும் மசூதிகளிலும் கூட்டம் கூடுவதே இல்லையா, அங்கு எல்லாம் சமூக இடைவெளி முறையாக கடைப்பிடிக்கப்படுகிறதா? டாஸ்மாக், அரசு போக்குவரத்து பேருந்துகள், காய்கறி கடைகள், மீன் இறைச்சி விற்பனை கூடங்கள் உள்ளிட்டவற்றில் கொரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் அனைத்தும் முறையாக பின்பற்றப்படுகிறதா? அரசியல்வாதிகள் நடத்தும் நிகழ்ச்சிகள், ஆய்வு கூட்டங்களில் சமூக இடைவெளி மீறப்படுவது இல்லையா? இவ்வளவு ஏன், அமைச்சர் கலந்துகொண்ட விழாவில் அவரே சமூக இடைவெளியை கடைபிடிக்கவில்லையே, இவர் எப்படி மற்றவர்களை குற்றம் சொல்லமுடியும்? இப்படி அரசு, அரசு அதிகாரிகள், அரசியல்வாதிகள், மாற்று மதத்தினர் செய்யும் எந்த தவறுகளையும் கண்டுகொள்ளாத தி.மு.க தலைவர்கள், ஹிந்துக்களுக்கு மட்டும் அனைத்து விதங்களிலும் தொடர்ந்து துரோகம் இழைத்து வருகின்றனர் என போதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.



# மூன்று ஆண்டுகளில் ராமர் கோயில் கட்டி முடிக்கப்படும்

விஜயபாரதம்

அயோத்தி ராமர்கோவில் கட்டுவதற்கு ஆண்டாள் பக்தர்கள் பேரவை சார்பில், 50 ஆயிரம் பேர் இணைந்து ரூ. 2 கோடி நன்கொடை வழங்கினர். சென்னையில் இரண்டு நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை கமிட்டியின் பொதுச்செயலாளரும், விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் மூத்த தலைவருமான சம்பத்ராய், நேற்று சென்னை முகலிவாக்கத்தில் உள்ள ஆண்டாள் பக்தர்கள் பேரவை தலைவர் சொக்கலிங்கம் இல்லத்திற்கு சென்றார். அங்கு ஆண்டாள் பக்தர்கள் பேரவைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், மரத்தினால் செய்யப்பட்ட ராமர் கோவில் மாதிரி கட்டடத்தை சம்பத்ராய், நினைவு பரிசாக வழங்கினார். அப்போது பேசிய சம்பத்ராய், அயோத்தி வழக்கில், உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி ராமர்கோவில் கட்டுமானப் பணிகள் நடைப்பெற்று வருகிறது. வரும் 2023 டிசம்பரில் கோவில் கட்டுமானப் பணிகள் நிறைவு பெறும். செங்கல், கம்பி இல்லாமல் செயற்கை பாறையில் தூண்கள் அமைத்து, 3 அடுக்குகளைக் கொண்டதாக இக்கோவில் கட்டப்படுகிறது. 400 ஆண்டுகள் நிலைத்து நிற்கத்தக்க அளவில் சிறப்பு சிமெண்ட் பயன்படுத்தப்படும். கோவில் திறப்பு விழாவில் 50 லட்சம் பக்தர்கள் பங்கேற்பார்கள் என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், விஷ்வ ஹிந்து பரிஷத் தென் பாரத அமைப்புச் செயலாளர் பி.எம்.நாகராஜன், வட மாநில அமைப்புச் செயலாளர் ராமன், தமிழக அமைப்பு செயலர் வழக்கறிஞர் சீனிவாசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# கர்த்தார்பூர் குருத்வாராவில் அனுமதி



விஜயபாரதம்

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் உள்ள கர்தார்பூர் பகுதியில் தர்பார் சாகிப் குருத்வாரா அமைந்துள்ளது. சீக்கிய மத குருவான குருநானக்கின் நினைவிடம் அமைந்துள்ளது. இந்த குருத்வாராவுக்கு பாரதத்தில் இருந்து ஏராளமான சீக்கிய பக்தர்கள் வருடந்தோறும் யாத்திரை செல்வர். கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இந்த குருத்வாரா மூடப்பட்டிருந்தது. வரும் செப்டம்பர் 22ல் குருநானக்கின் நினைவு தினம் அனுசரிக்கப்படும். அன்று இந்த குருத்வாராவில் சீக்கியர்கள் வழிபாடு நடத்த வருவதற்கு ஏதுவாக பாகிஸ்தான் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும், ஒரே நேரத்தில் 300 பேருக்கு மட்டுமே குருத்வாராவில் அனுமதி, பாகிஸ்தான் அரசிடம் இதற்காக சிறப்பு அனுமதி பெற வேண்டும், விமானத்தில் வருபவர்களுக்கு கொரோனா பரிசோதனை அவசியம் என பல கட்டுப்பாடுகள் இதற்கு விதிக்கப்பட்டுள்ளன.

# புதிய மதுரை ஆதீனம் பதவியேற்பு


விஜயபாரதம்

மதுரை ஆதின மடத்தின் 292வது ஆதீனமாக இருந்த அருணகிரிநாதர் மறைவை அடுத்து, 293வது புதிய ஆதீனமாக (மடாதிபதி) ஹரிஹர ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் பொறுப்பேற்றுக்கொண்டார். தமிழகத்தில் உள்ள அனைத்து தருமபுரம் ஆதினங்களும் மற்றும் முக்கிய பிரமுகர்கள் புதிய ஆதீனம் பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

# பின்வாங்கிய அறநிலையத்துறை


விஜயபாரதம்

சென்னை மயிலாப்பூரில் உள்ள ஆதிகேசவ பெருமாள் கோவிலில் முறைகேடுகள் நடைபெறுவதாகக் கூறிய ஹிந்து அறநிலையத்துறை அக்கோயிலை கைப்பற்றி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது. இதனை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கில் ஆஜரான அரசுத் தரப்பு வழக்கறிஞர், கோவிலை கையகப்படுத்திய அரசாணையை திரும்பப் பெறுவதாக தெரிவித்துள்ளார்.

# கலெக்டர் அலுவலகம் கட்டத்தடை


விஜயபாரதம்

கள்ளக்குறிச்சி மாவட்டம், வீரசோழபுரத்தில் உள்ள நாகரேஸ்வரர் கோவிலுக்கு சொந்தமான ஐந்து ஏக்கர் நிலத்தில், கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கான ஒருங்கிணைந்த கலெக்டர் அலுவலக வளாகம் அமைப்பதற்காக தமிழக அரசு பல மாடி கட்டடம் கட்ட ஆரம்பித்தது. இதற்கு சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. ரங்கராஜன் நரசிம்மன் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கில், நீதிபதி இந்த இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்தார். முன்னதாக ஏப்ரல் மாதத்தில் ஆரம்பகட்ட வேலைகளை மட்டுமே தொடங்க அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால், சட்டரீதியான அனுமதிகள் எதையும் பெறாமல் கொரோனா பொதுமுடக்க காலத்தில் அரசாங்கம் கட்டுமானத்தைத் தொடங்கியது குறிப்பிடத்தக்கது.

# நூதன முறையில் பண மோசடி


விஜயபாரதம்

இணைய வசதிகள் பெருக பெருக அதனை பயன்படுத்தி விதவிதமான திருட்டுகளும் பெருகிவிட்டன. அவ்வகையில், தற்போது ஒருவரின் செல்போன் எண்களைப்போல ஒரே மாதிரியாக இருக்கும் செல்போன் எண்களில் இருந்து அழைக்கும் மர்மநபர்கள், அவர்கள் தாங்கள் வெளியூரில் இருந்து அழைப்பதாகவும், அரசு தேர்வுக்கு விண்ணப்பித்ததில் ஒரு எண் தவறுதலாக நமது எண்ணை கொடுத்து விட்டதாகவும் கூறி அதில் வரும் ஓ.டி.பியை தெரிவித்தால்தான் தேர்வு எழுத முடியும் என கெஞ்சி கேட்பார்கள். பரிதாபப்பட்டு அந்த ஓ.டி.பியை தெரிவித்தால் அடுத்த சில நிடங்களில் நமது வங்கிப் பணம் முழுவதையும் ஆன்லைனில் எடுத்து விடுவார்கள். எனவே, இவ்விவகாரத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். யாருக்கும் ஓ.டி.பி எண்ணை பகிர கூடாது. வங்கியிலிருந்து வருவதுபோல லிங்க் எதுவும் செல்போனுக்கு வந்தால் அதையும் கிளிக் செய்ய வேண்டாம் என சைபர் கிரைம் காவல்துறையினர் எச்சரித்து உள்ளனர்.



விஜயபாரதம்

# அமர்நாத் யாத்திரை நிவாஸ்

ஜம்மு காஷ்மீர் அரசு, அமர்நாத் கோவில் நிர்வாகத்திற்கு ஸ்ரீநகரில் உள்ள பந்தா சௌக் பகுதியில் மூன்றரை ஏக்கர் நிலத்தை ஆண்டு வாடகையாக ரூ. 250க்கு 40 வருட காலத்திற்கு குத்தகைக்கு விட அனுமதி அளித்துள்ளது. இங்கு, கோயிலுக்கு வரும் பக்தர்கள் சுமார் 3.500 பேர் தங்குவதற்கு வசதியாக யாத்ரி நிவாஸ் கட்டப்படும். அடுத்த 18 மாதங்களில் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. முன்னதாக, கடந்த 2008ல் காஷ்மீரின் சோனாமார்க் பகுதியில் அமர்நாத் குகைக்கு அருகில் இதற்காக சுமார் 100 ஏக்கர் வன நிலம் ஒதுக்கப்பட்டது. இதனையடுத்து அங்கு பெரும் போராட்டங்கள் வெடித்தன. பலர் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் பி.டி.பி காங்கிரஸ் கூட்டணியில் விரிசலை ஏற்படுத்தியது. குலாம் நபி ஆசாத் ஜம்மு காஷ்மீர் முதல்வர் பதவியை ராஜினாமா செய்தார். அன்றைய கவர்னர் என்.என் வோரா, இந்த நில மாற்ற உத்தரவை ரத்து செய்தபிறகுதான் காஷ்மீரில் இந்த ஐந்து மாத போராட்டம் முடிவுக்கு வந்தது என்பது வரலாறு.

# பொன்முடிதான் பொறுப்பு



விஜயபாரதம்

விழுப்புரம் அருகே மாம்பழப்பட்டு பகுதியில் திருமண நிகழ்ச்சிக்கு தி.மு.க அமைச்சர் க.பொன்முடி வருவதையொட்டி சாலையோரத்தில் தி.மு.க கொடிக்கம்பங்கள் நடப்பட்டன. இதில் உதவிக்காக வந்த 13 வயது தினேஷ் என்ற சிறுவன் கட்சிக் கம்பம் ஊன்றியபோது உயர்மின் கம்பி உரசி சிறுவன் தூக்கி வீசப்பட்டான். மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி பலியானான். சிறுவனின் தாய் காவல்நிலையத்தில் இது குறித்து புகார் அளித்தார். சிறுவனின் மரணத்தை சந்தேக மரணம் என காவல்துறையினர் வழக்குபதிவு செய்து அவனை அழைத்து சென்ற வெங்கடேசனிடம் விசாரணை நடத்தினர். இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து பேசிய முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், சிறுவன் உயிரிழப்பிற்கு அமைச்சர் பொன்முடி பொறுப்பேற்க வேண்டுமென்றும் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி உள்ளார். கடந்த 2019 செப்டம்பரில் அ.தி.மு.க பேனர் விழுந்து சுபஸ்ரீ என்ற பெண் பலியானபோது பொங்கிய தி.மு.கவினரும் அதன் கூட்டணி கட்சியினரும் இந்த விஷயத்தில் மௌனம் காப்பது ஏனோ என நெட்டிசன்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

# மலபார் கூட்டு போர்பயிற்சி

பாரதம், அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய 4 நாடுகள் இணைந்து 'குவாட் நாடுகள்' (நாற்கர பாதுகாப்பு பேச்சுவார்த்தை நாடுகள்) என்ற அமைப்பை உருவாக்கியுள்ளன. இந்நாடுகளின் கடற்படைகள் ஆண்டுதோறும் மலபார் கூட்டு போர்ப்பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன. இந்த ஆண்டு'க்கான கூட்டு போர்ப்பயிற்சி 'தி மலபார்21' என்று பெயரிடப்பட்டுள்ளது. இது, அமெரிக்காவின் ஆளுகையின் கீழ் உள்ள மேற்கு பசிபிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ள குவாம் தீவில் வரும் 26 முதல் 29ம் தேதிவரை நான்கு நாட்கள் நடைபெறுகிறது.

விஜயபாரதம்

# கோயில் நிலத்திற்கு வருவாய்துறை பட்டா



விஜயபாரதம்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு அருகில் உள்ள வையப்பமலை சுப்ரமணியசாமி கோயில் ஹிந்து அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இக்கோயிலுக்கு சொந்தமான 10.64 ஹெக்டேர் நிலம் விவசாயம் அல்லது கோயிலுக்கு வருவாயை ஈட்டக்கூடிய கட்டுமானங்களை உருவாக்க பயன்படுத்தலாம் என கூறப்பட்டுள்ளது. ஆனால், கோயில் நிலத்தை முறைகேடாக கிராம நத்தமாக மாற்றிய வருவாய்த்துறை, அந்த நிலத்தை 81 பேருக்கு இலவச வீட்டு மனை பட்டா போட்டு கொடுத்துள்ளது. இதனை எதிர்த்து கோயில் சார்பில் பரம்பரை அறங்காவலர் தொடர்ந்துள்ள வழக்கில், கோயில் நிர்வாகம், அறநிலையத்துறை தடையில்லா சான்று இல்லாமல் பட்டா வழங்கக் கூடாது என, விதிகள் உள்ளன. கோயில் விழா, சடங்குகளுக்கு மட்டுமே தற்காலிகமாக பயன்படுத்தலாம் என்ற விதிகளை மீறி பட்டா வழங்கப்பட்டுள்ளது என குற்றம் சாட்டப்பட்டது. வட்டாட்சியர் தாக்கல் செய்த பதில் மனுவில், அந்த இடம் ஹிந்து அறநிலையத் துறைக்கு சொந்தமானது என நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. அரசு நிலம்தான் பட்டா போடப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி, கோயிலின் நிலத்தை அதன் வருமானத்துக்கு வழிசெய்வதை தவிர பிற நோக்கத்துக்காக பயன்படுத்தவோ, வேறு யாருக்கு வழங்கவோ முடியாது என, அறநிலையத் துறை சட்டம் மற்றும் வருவாய் துறை நிலை விதிகள் உள்ளதால், அறநிலையத்துறை ஆணையரின் தடையில்லா சான்று இல்லாமல் பட்டா மாற்றம் செய்யக்கூடாது என உத்தரவிட்டார்.

---



விஜயபாரதம்

# மெஹபூபா பேச்சிற்கு எதிர்ப்பு

காஷ்மீரில் கட்சிக்கூட்டத்தில் பேசிய முன்னாள் முதல்வரும், மக்கள் ஜனநாயகக் கட்சி தலைவருமான மெஹபூபா முப்தி ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் அந்த நாட்டை கைப்பற்றியதை ஜம்மு காஷ்மிருடன் ஒப்பிட்டு பேசியுள்ளார். மேலும், வன்முறையைத் தூண்டும் விதமாக, மக்களின் விருப்பத்தைக் கேட்டு மீண்டும் சிறப்பு அந்தஸ்தை அளிக்க வேண்டும். இல்லையெனில், மத்திய அரசு மண்டியிடும் நிலை விரைவில் உருவாகும் எனவும் கருத்து தெரிவித்துள்ளார். இது கடும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு ஜம்மு காஷ்மீர் பா.ஜ.க தலைவர் ரவிந்தர் ரெய்னா, காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் ஜெய்வீர் ஷெர்கில் உள்ளிட்டோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# அரசு இணையதளத்தில் தவறான தகவல்கள்



விஜயபாரதம்

மத்திய அரசினால் நிர்வகிக்கப்படும் 'நௌ இந்தியா' இணையதளம் (KnowIndia.gov.in) இடைக்கால வரலாற்றின் கீழ் முகலாய சாம்ராஜ்யம் என்ற தலைப்பில், பாரதத்தை ஆண்ட முகலாயர்களின் ஆட்சியை 'மிக சிறந்த ஆட்சி'' என்று பாராட்டியுள்ளது. அதில் ஔவுரங்கசீப், அக்பர், பாபர் போன்றவர்கள், மதச்சார்பற்ற, சகிப்புத்தன்மையுள்ள, நல்ல ஆட்சியாளர்களாக பாராட்டப்பட்டுள்ளனர்.

பல நூற்றாண்டுகளாக அவர்களை எதிர்த்து போராடிய ரஜபுத்திரர்கள், சிவாஜி உள்ளிட்ட மராட்டியர்கள், அஹோம்கள் உள்ளிட்டோர் குறித்த குறிப்புகள் இடம்பெறவில்லை. கொடுங்கோல் முகலாயர்களின் கொடூரங்கள் மறைக்கப்பட்டுள்ளன. அவர்களால் கொல்லப்பட்ட ஹிந்துக்கள், அழிக்கப்பட்ட ஹிந்து ஆலயங்கள், வாள்முனை மதமாற்றங்கள், அதற்காக உயிரைவிட்ட ஹிந்து, சீக்கிய குருமார்கள் உள்ளிட்டோரின் தகவல்கள் மறைக்கப்பட்டுள்ளன. சீக்கிய குரு அர்ஜன் தேவ் தூக்கிலிடப்பட்டதாக ஒரே ஒரு குறிப்பு அதுவும் தெளிவற்ற முறையில் உள்ளது.

மாறாக, ஜஹாங்கீர் சமூகத்தை சீர்திருத்த முயன்றார், ஹிந்துக்கள், கிறிஸ்தவர்கள், யூதர்களிடம் சகிப்புத்தன்மையுடன் இருந்தார். முழு துணைக்கண்டத்தையும் தனது ஆட்சியின் கீழ் கொண்டுவர வேண்டும் என்ற தனது கனவை ஔரங்கசீப்பால் நிறைவேற்ற முடியவில்லை என அனைத்தும் ஒருசார்புத் தகவல்களாகவே இடம்பெற்றுள்ளன. உண்மையான வரலாறுகள் சிதைக்கப்பட்டுள்ளது.

அரசின் இந்த செயல்பாட்டினை பல நெட்டிசன்கள் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். ஆர்.எஸ்.எஸ் பிரச்சாரகர் ரத்தன் சாரதாவும் இதனை சுட்டிக்காட்டியுள்ளார். தவறான தகவல்கள் நீக்கப்பட்டு பாரதத்தின் உண்மையான வரலாற்றை மக்கள் அறிய செய்ய வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.



# வீடியோ ஆதாரம் வெளியிட்ட அ.தி.மு.க



விஜயபாரதம்

மறைந்த முதல்வர் ஜெயலலிதா ஓய்வெடுக்கும் கோடநாடு எஸ்டேட் பங்களா காவலாளி கொலை வழக்கில், கேரளாவைச் சேர்ந்த சையன், மனோஜ் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு தற்போது ஜாமினில் உள்ளனர். இவர்களிடம் மறுவிசாரணை நடைபெற்று வருகிறது. இவ்வழக்கில் தன்னை சிக்க வைக்க முயற்சிகள் நடப்பதாக சட்டசபையில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டினார். அ.தி.மு.க சட்டமன்ற உறுப்பினர்கள் இதற்காக போராட்டத்திலும் ஈடுபட்டனர். இந்நிலையில், கைதான சையன், மனோஜ், பத்திரிகையாளர் பிரதீப் ஆகியோர், இந்த வழக்கில் முன்னாள் முதல்வர் பழனிசாமியை சிக்க வைப்பது பற்றி பேசிய 'வீடியோ' ஆதாரம் அ.தி.மு.கவின் அதிகாரப்பூர்வ டுவிட்டரில் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

# மூன்றாவது அலை எப்போது?

கொரோனா தொற்று குறைந்தாலும் பாரதத்தில், அதன் 3வது அலை பரவும் அபாயம் இன்னமும் உள்ளது என மருத்துவர்கள் தொடர்ந்து எச்சரித்து வருகின்றனர். முன்னதாக, கொரோனா 3வது அலை ஆகஸ்ட்டில் துவங்கி, வரும் அக்டோபரில் உச்சத்தை எட்டும். ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் தினமும் கொரோனா பாதிப்புக்கு உள்ளாவார்கள். எனினும் 2ம் அலையை போல இது மோசமாக இருக்க வாய்ப்பில்லை என, ஐ.ஐ.டி ஆராய்ச்சியாளர்கள் ஜூலையில் தெரிவித்திருந்தனர். இந்நிலையில், சமீபத்தில் உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனம் (என்.ஐ.டி.எம்,) பிரதமர் அலுவலகத்திற்கு அறிக்கை ஒன்றை அளித்துள்ளது. அதில், 'கொரோனாவின் 3வது அலை வரும் அக்டோபர் மாதத்தில் உச்சத்தை அடையலாம்' எனத் தெரிவித்துள்ளது. 'தடுப்பூசி செலுத்திக்கொள்ளுதல், முகக் கவசம் அணிதல், கிருமி நாசினி, சோப்புகளைக் கொண்டு கைகளை சுத்தம் செய்தல், கூட்டத்தைத் தவிர்த்தல் உள்ளிட்ட தடுப்பு நடைமுறைகளை மக்கள் முழுமையாக பின்பற்றினால்தான் 3வது அலை பாதிப்பிலிருந்து தப்பிக்க முடியும்' என, மருத்துவ வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.



விஜயபாரதம்

# சி.ஏ.ஏ. சட்டத்தின் அவசியம்

பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் சிறுபான்மையினராக வசிக்கும் ஹிந்து, சீக்கியர் உள்ளிட்ட மக்களுக்கு, நம் நாட்டில் குடியுரிமை வழங்க மத்திய அரசு முடிவு செய்தது.



விஜயபாரதம்

இதற்காக, குடியுரிமை சட்டத்தில் திருத்தம் செய்து மசோதா நிறைவேற்றப்பட்டது. இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. டெல்லி உட்பட பல இடங்களில் வன்முறை போராட்டங்களை முஸ்லிம் அமைப்புகள் அரங்கேற்றின. இந்நிலையில் ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகள் ஆட்சியை கைப்பற்றி உள்ளனர். இதையடுத்து, அங்கு சிக்கித் தவிக்கும் நூற்றுக்கணக்கான ஹிந்து, சீக்கியர்களை மத்திய அரசு மீட்டு அழைத்து வருகிறது. இதனை சுட்டிக்காட்டியுள்ள மத்திய பெட்ரோலிய துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, இது போன்றவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யவே, நாம் குடியுரிமை திருத்தச் சட்டத்தை இயற்றினோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# வலையில் சிக்கிய மீம்கள்









# பாகிஸ்தானை தாக்குவோம்



விஜயபாரதம்

பாகிஸ்தானில் டி.டி.பி எனப்படும் தெரிக் இ தலிபான் எனும் பாகிஸ்தான் தலிபான் அமைப்பு இயங்கி வருகிறது. ஆப்கான் தலிபான்கள் வேறு பாகிஸ்தானின் இந்த தலிபான்கள் வேறு. இவர்கள் பாகிஸ்தான் அரசுக்கு எதிராக அவ்வப்போது செயல்படுகின்றனர். பாகிஸ்தானில் உள்ள சீனர்களுக்கு எதிராக அவ்வப்போது இவர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். சில நாட்களுக்கு முன் நடைபெற்ற சீனர்கள் மீதான தற்கொலைப் படை தாக்குலையும் நடத்தியவர்கள் இவர்கள்தான். இதனால், அவர்களை பாரதத்தின் 'ரா' உளவு அமைப்புதான் வழி நடத்துகிறது என்று பாகிஸ்தான் அரசு தொடர்ந்து குற்றம் சாட்டிவருகிறது. இந்நிலையில் தெரிக் இ தலிபான் அமைப்பின் தலைவர் முப்தி நூர் வாலி மசூத், பலுசிஸ்தான் பஷ்துனிஸ்தான் சிந்துதேஷ் ஆகிய மாகாணங்களுக்கு பாகிஸ்தான் அரசு சுதந்திரம் அளிக்க வேண்டும் இல்லையென்றால் இனி நாங்கள் பாகிஸ்தான் ராணுவத்தையும் தாக்குவோம் என அறிவித்துள்ளார்.

# ரமணரும் பசுவும்

மகரிஷி ஒரு மிகப்பெரிய குருவாக இருந்தவர். இவர் அமைதியானவர். எப்பவாவது ஓரிரு வார்த்தைகள் பேசுவதோடு சரி.

ஒவ்வொரு நாள் காலையிலும் ஒரு மணிநேரம் மக்களுக்கு தரிசனம் தருவார். மக்கள் அவரைக் காண அமர்ந்திருப்பார்கள். அதில் ஒரு பசுவும் அப்போது அவரை காண மக்களோடு வந்துவிடும்.

மற்ற மனிதர்கள் அவரை காண காலம் தவறினாலும் அந்த பசு மட்டும் நேரம் தவறாமல் ஆஜராகும். மழை வெயில் குளிர் என எதுவாக இருந்தாலும்,அதற்கு நோய் தாக்கினாலும் ஆரோக்கியமாக இருந்தாலும் சரியாக வந்துவிடும்.

பசு வாராண்டாவில் இருக்கும் ஜன்னலில் தலையை உள்ளே விட்டு குருவை நோக்கி நின்றிருக்கும்.

சில சமயங்களில் கண்கள் திறந்திருக்கும். சில சமயங்களில் கண்கள் மூடியிருக்கும். சில நேரங்களில் கண்களில் கண்ணீர வழிந்துகொண்டிருக்கும். இது ஒரு அதிசய நிகழ்வாகும்.

ஒரு நாள் பசு மிகவும் நோய்வாய்ப்பட்டு படுத்துவிட்டது. அதனால் வரமுடியவில்லை.

ரமணர் பசுவைக் காண கிளம்பிவிட்டார்.

மற்ற சீடர்கள் திகைத்தனர். ரமணர் அது எப்போதும் சரியாக வந்துவிடும். அதன் ஆத்மா தயாராக தான் இருந்திருக்கும்.. உடல் தான் ஒத்துழைத்திருக்காது... என தன் முக்கியமான சீடரான பசுவைக் காணக் கிளம்பிவிட்டார்.

ரமணர் அந்த இடத்தை அடைந்தார்.

அந்த பசு ரமணர் அமரும் திசையை நோக்கி ஜன்னலில் பார்ப்பது போலவே

அமர்ந்திருந்தது. அதனால் எழக்கூட முடியவில்லை. ரமணரைப் பார்த்ததும் கண்களை மூடிக்கொண்டது. கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது. பின்பு இறந்து போனது.

உலக வரலாற்றிலேயே இதுதான் ஒரு தன்னையுணர்ந்த மனிதனின் முன்னால் விழிப்புணர்வு அடைந்த பசு விடைபெற்ற நிகழ்வு நடந்ததாகும்.

ரமணரிடம் சீடர்கள் கேட்டார்கள் இந்த பசு மனிதனாக பிறக்குமா என்று.

அதற்கு ரமணர் ``அதற்கு மனிதனாக பிறக்க வேண்டிய அவசியமில்லை. அந்த பசு ஞான மடைந்த பின்பு இறந்ததனால் அதற்கு மறுபிறவி என்பது கிடையாது`` என்றார்.

ஆம் ஏற்கும் திறனுடையது பசு. அதனால் பசுக்கள் புனிதமாக வணங்கப்படுகின்றன. விழிப்புணர்வு அடைந்த ஒரே ஜீவன் பசு மட்டுமே. அதனால் தான் ஆசிரமங்களிலும்

கோயில்களிலும் பசுக்கள் இடம்பெற்றுள்ளன. அவைகள் சுத்தமான விழிகளுடன் அப்பாவித்தனமாக வாழ்ந்துக் கொண்டிருக்கும்.

ரமணர் குறித்து ஓஷோ